Tamil

Refugee Legal

டிசம்பர் 2017

# துரித வழி செயல்பாட்டு உதவி மையங்களில் கிடைக்கும் சட்ட உதவி (Legal Assistance at Fast Track clinics)

'புகலிடம் நாடுவோருக்குக்கான சட்ட விவகாரம்' (Refugee Legal) எனும் அமைப்பின் மூலம் எமது துரித வழி செயல்பாட்டு உதவி மையங்களில் அளிக்கப்படும் இலவச சட்ட உதவியைப் பற்றியதாகும் இந்தத் தகவல் ஏடு:

- 1 அக்டோபர் 2017-க்கு முன்பாக 'துரித வழி மதிப்பீடு' (Fast Track Assessment) செயல்முறையின் கீழ் நீங்கள் பாதுகாப்பிற்காக விண்ணப்பித்திருந்தால், மற்றும்
- உங்களுடைய வழக்கில் உங்களுக்கு மேலதிகமாக உதவி தேவைப்பட்டால் (உங்களுடைய வழக்கினை குடிவரவுத் திணைக்களம் மதிப்பீடு செய்துகொண்டிருக்கும் வேளையில் நீங்கள் சட்ட உதவியைப் பெற வேண்டியது அவசியம்).

உங்களுடைய வழக்கினைக் குடிவரவுத் திணைக்களம் மதிப்பீடு செய்துகொண்டிருக்கும் போது 'புகலிடம் நாடுவோருக்குக்கான சட்ட விவகாரம்' எனும் அமைப்பினால் இரண்டு கட்டங்களில் எமது சட்ட உதவி மையங்களில் உங்களுக்கு இலவசமாக உதவி செய்ய இயலும்.

1. நேர்காணல் ஒன்றிற்காக வருமாறு திணைக்களம் உங்களுக்குச் சொல்லும்போது, நாங்கள்:
   அ. இந்த நேர்காணலின் செயல்பாட்டு முறை என்ன என்பதைப் பற்றி உங்களுக்குச் சொல்வோம்; மற்றும்
   ஆ. உங்களுக்குத் தேவைப்பட்டால், உங்களுடைய பாதுகாப்புக் கோரிக்கைகளுக்கு ஆதாரமாக இருக்கும் வகையில், உங்களுடைய நாட்டின் நிலவரங்களைப் பற்றிய தகவல்களைக் கொண்ட வாக்குமூலம் ஒன்றை சமர்ப்பிப்பதற்காகத் தயார் செய்வோம்;
2. உங்களுடைய விண்ணப்பமானது குடிவரவுத் திணைக்களத்தினால் மறுக்கப்பட்டு, மீள்பரிசீலனைக்காக ‘குடிவரவு மதிப்பீட்டு அதிகார’(Immigration Assessment Authority (IAA))த்திற்கு அனுப்பப்பட்டால், நாங்கள்:
   அ. IAA செயல்பாட்டு முறையைப் பற்றி உங்களுக்கு அறிவுரை சொல்வோம்; மற்றும்

ஆ. IAA -விற்குக் கொடுப்பதற்காக வாக்குமூலம் மற்றும் சட்டரீதியான சமர்ப்பணம் ஒன்றை உங்களிடமிருந்து தயாரிப்போம்.

உங்களுடைய நேர்காணலுக்கு முன்பாக நாங்கள் உங்களுக்கு உதவுவதற்காக சந்திப்புவேளை ஒன்றை ஏற்பாடு செய்ய ஏது செய்யும் வகையில், நேர்காணலுக்கு வருமாறு உங்களைக் கேட்டு திணைக்களம் கடிதம் ஒன்றை உங்களுக்கு அனுப்பினால், அந்தக் கடிதத்தினை நீங்கள் பெற்ற உடனேயே நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ள வேண்டும்.

உங்களுடைய விண்ணப்பத்தினை மறுத்துத் திணைக்களம் கடிதம் ஒன்றை உங்களுக்கு அனுப்பினால், நீங்கள் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ள வேண்டும், ஏனெனில் IAA-இற்குத் தகவல்களைக் கொடுப்பதற்காக் 21 நாள் அவகாசம் மட்டுமே உங்களுக்கு இருக்கும்.

எமது உதவி மையங்களில் தொலைபேசி மூலமான மொழிபெயர்த்துரைப்பாளர் வசதி உள்ளது. நீங்கள் எம்முடன் முதல் முறையாகத் தொடர்புகொள்ளும்போது உங்களுக்கு மொழிபெயர்த்துரைப்பாளர் உதவி தேவையா என்பதைத் தயவு செய்து எமக்குத் தெரிவியுங்கள்.

எமது மையங்களில் அளிக்கப்படும் உதவியைப் பெற, (03) 9413 0101 எனும் இலக்கத்தில் தொலைபேசி மூலம் அல்லது clinic@refugeelegal.org.au எனும் மின்னஞ்சல் மூலம் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

முக்கியம்

12 ஆகஸ்ட்டு 2012 மற்றும் 1 ஜனவரி 2014-க்கு இடைப்பட்ட காலத்தில் நீங்கள் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்கு வந்திருந்து விசாவிற்கான விண்ணப்பம் ஒன்றை இன்னும் தாக்கல் செய்யாமலிருந்தால், தயவு செய்து உதவி மற்றும் அறிவுரைக்காக 'புகலிடம் நாடுவோருக்குக்கான சட்ட விவகாரம்' (Refugee Legal) எனும் எமது அமைப்புடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்.

'புகலிடம் நாடுவோருக்குக்கான சட்ட விவகாரம்' (Refugee Legal) என்பது இலாப நோக்கற்ற சமூக சேவை அமைப்பு. குடிவரவைப் பற்றிய சட்டங்கள், கொள்கைகள் மற்றும் செயல்பாட்டு முறைகளில் நாங்கள் சிறப்புத்துவம் பெற்றவர்கள். அடைக்கலம் நாடுவோருக்கும், புகலிடம் நாடுவோருக்கும் 29 ஆண்டுகளாக சட்ட உதவி அளிப்பதில் 'புகலிடம் நாடுவோருக்குக்கான சட்ட விவகாரம்' (Refugee Legal)

எனும் எமது அமைப்பு முன்னணி வகிக்கிறது. 'துரித வழி' செயல்பாட்டு முறையைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு www.refugeelegal.org.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.


புகலிடம் நாடுவோரது உரிமைகளைப்
பாதுகாக்கும் சேவையில்
Refugee Legal

Refugee & Immigration
Legal Centre Inc
ABN 94 806 293 897

PO Box 1139
Level 6, 20 Otter Street
Collingwood, VIC 3066 Australia
தொலைபேசி: (03) 9413 0101
தொலைநகல்: (03) 9413 0144
refugeelegal@refugeelegal.org.au
www.refugeelegal.org.au